**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்**

**அ.வ.எண்.272/2023**

வாதி தரப்பு 2வது சாட்சி அழகுராமசாமி என்பவரின் வாக்குமூலம் (1869ம் ஆண்டு சாட்சியசட்டம் 44வது பிரிவு 6வது விதியின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அழகுராமசாமி | சாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | |

நாள் : 09.06.2026

வா.சா.2

**முதல் விசாரணை:** நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சியாவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது ஆதார் அட்டை நகல் **வா.சா.ஆ.18.**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

இந்த வழக்கில் சாட்சியம் அழிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றுசொன்னால் – சரிதான். உங்களது சித்தப்பா 1ம் வாதி ராமமூர்த்தி சொன்னதன்பேரில் இந்த நீதிமன்றத்தில் நீங்கள் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றுசொன்னால் – இல்லை, 1ம் வாதி ராமமூர்த்தி என் உள்ளூர்தான் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சொத்துக்கள் குறித்து உங்களுக்கு தெரியுமா என்றால் – தெரியும், 11 இலக்க சொத்துக்கள் உள்ளது. என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கறிஞருக்கு சொன்னது ராமமூர்த்திதானா என்றால் – ஆம். 23.08.1961ம்

வருட பாகவிஸ்தி பத்திரத்தை நீங்கள் பார்த்திதுள்ளீர்களா என்றால் – இல்லை. மேற்கண்ட பாகவிஸ்தி பத்திரத்தில் எத்தனை இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் – தெரியும், 11 இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான சர்வே எண்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் – தெரியாது. அதேபோல் மேற்கண்ட பாகவிஸ்தி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் யார் யார் அனுபவத்தில் உள்ளது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் – தெரியும். எந்த எந்த சர்வே எண்களில் உள்ள சொத்துக்களை யார் யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொல்லமுடியுமா என்றால் – சர்வே எண்கள் எனக்கு தெரியாது. அதபோல் சொத்துக்களுக்கான பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் – தெரியும். மேற்கண்ட தாவா சொத்துக்கான பட்டா சாந்தா பெயரில் உள்ளது. வட்டாட்சியர் விசாரித்து மேற்கண்ட சாந்தா பெயரில் பட்டா வழுங்கப்பட்டது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் – தெரியாது. சாந்தாவினுடைய கணவர் வீராச்சாமி எப்போது இறந்தார் என்றால் – 2000 ம் ஆண்டு இறந்தார். உங்கள் ஊர் பழைய president சீனிவாசன் என்பவர் ஆவார். அதன் பிறகு ராஜ்குமார் என்பவர்தான் president என்றால் – சரிதான். பொதுவாக உஙகள் ஊரில் நடக்கும் பிரச்சினைகள் சம்மந்தமாக சீனிவாசனும், ராஜ்குமாரும்தான் பேசி பிரச்சினைகளை சமரசம் பேசிவைப்பார்கள் என்றால் – சரிதான். மேற்கண்ட பஞ்சாயத்து president சீனிவாசன் மற்றும் ராஜ்குமாரின் கையெழுத்து உங்களுக்கு தெரியுமா என்றால் – தெரியாது. இவ்வழக்கின் வாதி ராமமூர்த்தியின் சகோதரர் பெயர் கிருஷ்ணமூர்த்தி ஆகும். அவர் ஓ.கோவில்பட்டியில் குடியிருக்கிறார். அதேபோல் உங்கள் மேற்குதெருவில் குடியிருக்கும் ரகுபதி என்பவரை உங்களுக்கு தெரியுமா என்றால் – தெரியும். மேற்கண்ட பஞ்சாயத்து president சீனிவாசன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் சாட்சிகள் ரகுபதி மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில்

என்னிடம் காண்பிக்கப்படும் 27.06.2020ம் தேதிய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் – அதுகுறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து உங்களுக்கு முழுமையாக தெரியாது என்றுசொன்னால் – சொத்து குறித்து தெரியும், ஏனைய விவரங்கள் தெரியாது. இந்த வழக்கில் 1ம் வாதி உங்களுக்கு சித்தப்பா முறையாவார் என்றும், அதனை மறைத்து நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றுசொன்னால் – சாட்சி தான் அளித்த சாட்சியத்திற்கு முரண்பட்டு மேற்கண்ட 1ம் வாதி ராமமூர்த்தி தன்னுடைய சித்தப்பா முறையாவார் என்று நீதிமன்றத்தில் முன்னுக்குபின் முரணாக நீதியின் நலனை குலைக்கும் பொருட்டு நீதிமன்றத்தில் நேரத்தை வீணடிக்கும் பொருட்டும் சாட்சியம் அளித்துள்ளதால் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.